# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

**NEET , JEE AND BOARD EXAM பயிற்சி மையம்,**

**SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்.**

**அலைபேசி : 99655-31727, 94432-31727**


## பத்தாம் வகுப்பு - தமிழ் முதல் தாள்

### காலாண்டுப் பொதுத்தேர்வு செப்டம்பர் - 2019

### மொத்த மதிப்பெண்கள் : 100

## TENTATIVE ANSWERKEY

| | பகுதி – 1(மதிப்பெண்கள் - 14) | 14x1=14 |
|---|---|---|
| **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** | | |
| 1 | ஆ) கனிச்சாறு | 1 |
| 2 | அ) பாரதியார் | 1 |
| 3 | ஆ) கால்டுவெல் | 1 |
| 4 | ஈ) சருகும் சண்டும் | 1 |
| 5 | ஈ) தொல்காப்பியர் | 1 |
| 6 | அ) காற்று | 1 |
| 7 | ஆ) ii, iii - சரி | 1 |
| 8 | இ) வெற்றி வேற்கை | 1 |
| 9 | இ) 583 | 1 |
| | **பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (10,11,12,13,14) விடை தருக.** | |
| 10 | இ) மலைபடுகடாம் | 1 |
| 11 | ஆ) திணை | 1 |
| 12 | இ) கூத்தராற்றுப்படை | 1 |
| 13 | ஈ) சொல்லிசை அளபெடை | 1 |
| 14 | அ) சங்க இலக்கியம் | 1 |
| | **பகுதி – II (மதிப்பெண் 20)**<br>**பிரிவு – 1** | **5x2=10** |
| 15 | **'இலா' என்னும் மென்பொருள் :**<br>❖ பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.<br>❖ ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுக்கு இணையம் மூலம் சேவை அளிக்கிறது. | 1<br>1 |
| 16 | **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள்:**<br>❖ வியந்துரைத்தல்<br>❖ வரவேற்றல் நல்சொற்களைப் பேசுதல்;<br>❖ இனிமையான சொற்களைப் பேசுவது<br>❖ முகமலர்ச்சியுடன் பேசுதல்;<br>❖ அன்போடு வரவேற்றல்,<br>❖ எழுந்து நிற்றல், | 2 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | ❖ தொடர்புடைய செய்திகளைக் கூறி மகிழச் செய்தல், அவர் அருகிலேயே அமருதல்<br>❖ அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின்தொடர்ந்து செல்லுதல்<br>❖ புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் | |
| 17 | நான் கற்க விரும்பும் மொழி இந்தி.<br>**இந்தி கற்க விரும்பக் காரணம் :**<br>❖ இந்தி நமது நாட்டின் தேசிய மொழி.<br>❖ இந்தி இந்திய பாராளுமன்ற மொழி. | 1<br>½<br>½ |
| 18 | **தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள்:**<br>❖ துளிர் (அ) தளிர்<br>❖ முறி (அ) கொழுந்து<br>❖ குருத்து<br>❖ கொழுந்தாடை | ½<br>½<br>½<br>½ |
| 19 | **தென்றல் காற்று:**<br>❖ தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல்.<br>❖ மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்குகளையும் கடந்து வேகம் குறைந்து இதமான காற்றைத் தருகிறது. | 1<br>1 |
| 20 | **விடைக்கேற்ற வினா:**<br>அ) உண்மையான செல்வம் என்பது யாது?<br>ஆ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று எது? | 1<br>1 |
| 21 | **மொழிபெயர்ப்பால் திருக்குறள் அடைந்த பெருமை:**<br>உலகில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதன் காரணமாக உலகப் பொதுமறையாக உயர்ந்தது. | 2 |
| | **பிரிவு - 2** | **5x2=10** |
| 22 | **கெடுப்பார் இலானுங் கெடுபவர் :**<br>குற்றம் கண்டபோது இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடி கொள்ளாத மன்னன் கெடுப்பார் இலானுங் கெடுவான். | 2 |
| 23 | **பண்டைய தமிழ்க் கலைஞர்கள் :**<br>கூத்தர், பாணர், விறலியர் | 2 |
| 24 | **மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கு:**<br>❖ மருத்துவர் புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்றும், நோயைக் குணமாக்கிவிடுவார் என்றும் நம்பிக்கையுடன் இருக்கிறார் நோயாளி.<br>❖ இங்கு மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் நோயாளியைக் குணப்படுத்துகிறது. | 1<br>1 |
| 25 | **பொருத்துக:**<br>முன்னைக்கும் முன்னை – பழமைக்குப் பழமையாய்<br>தென்னன் மகளே – பாண்டிய மன்னனின் மகளே<br>மெத்த வணிகலமும் – மிகுதியான வணிகக்கப்பல்கள்<br>நெல்லோடு நாழி கொண்ட – நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் | ½<br>½<br>½<br>½ |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| 26 | ❖ குசேலபாண்டியன்.<br>❖ இடைக்காடனார் (இடைக்காட்டுப் புலவன்) | 1<br>1 |
| 27 | **அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள்:**<br>❖ அன்னை மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே!<br>❖ பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! | 2 |
| 28 | **'விடும்' என முடியும் குறள்:**<br>முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும். | 2 |
| | **பகுதி – III (மதிப்பெண் 50)**<br>**பிரிவு – 1** | **3x5=15** |
| 29 | **வாழை இலை விருந்து, உணவு பரிமாறும் முறை:**<br>❖ தமிழா் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.<br>❖ நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அறிந்திருந்தனர்.<br>❖ தமிழர்கள் உணவு பரிமாறும் போது உண்பவரின் இடப்பக்கம் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும்.<br>❖ ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.<br>❖ உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர். | 1<br>1<br>1<br>1<br>1 |
| 30 | **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன:**<br>❖ இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.<br>❖ மனிதனின் அன்றாடத் தேவையான நீர், உணவு, உடை எல்லாவற்றிலும் அறிவியலின் வளர்ச்சி பயன்படுகிறது.<br>❖ விடியலில் எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை நாம் அறிவியலால் உருவான மின்சாதனங்களைப் பயன்படுத்துகிறோம்.<br>❖ அறுவைசிகிச்சை வரை எல்லாவற்றிற்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பயன்படுகின்றன.<br>❖ பள்ளி, கல்லூரிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் எங்கும் நிறைந்த இறைவனைப் போல் அறிவியல் கண்டுபிடிப்புகள் உலகெங்கும் நிறைந்து மனிதனை மேம்படுத்துகின்றன. | 1<br>1<br>1<br>1<br>1 |
| 31 | **இளம் பயிர் வகைகள்:**<br>❖ கண்ணன் வயலில் **நெல்நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.<br>❖ தாத்தா நிறைய **தென்னம்பிள்ளைகளை** வாங்கி வந்தார்.<br>❖ **கத்தரி நாற்றில்** வெட்டுக்கிளிகள் இருந்தன.<br>❖ **மாங்கன்று** மழைக்குப்பிறகு தளிர் விட்டுள்ளது.<br>❖ வாழைமரத்தினடியில் **வாழைக்கன்றுகள்** உள்ளன. | 1<br>1<br>1<br>1<br>1 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| 32 | காற்று வீசுகின்ற திசையைக் கொண்டும் தமிழர்கள் காற்றிற்குப் பல பெயர் சூட்டியுள்ளனர்.<br>❖ கிழக்கு என்பதற்குக் குணக்கு என்று பெயர். கிழக்கிலிருந்து வீசும்போது கொண்டல் எனப்படுகிறது.<br>❖ கொண்டலாக காற்று குளிர்ச்சி தருகிறது. மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறது.<br>❖ மேற்கிலிருந்து(குடக்கு) வீசும்போது காற்று கோடை எனப்படுகிறது. வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறது.<br>❖ வடக்கிலிருந்து(வாடை) வீசும்போது வாடைக்காற்று எனப்படுகிறது. பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறது.<br>❖ தெற்கிலிருந்து தென்றல். மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பலதடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறது. | <br><br>1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1 |
| 33 | **இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும்:**<br>❖ Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன.<br>❖ இதற்கு மாறாக Transcribe , Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன.<br>❖ இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. எனவே இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். | <br><br>2<br><br>2<br><br>1 |
| | **பிரிவு – 2** | **3x5=15** |
| 34 | **தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கு:**<br>**தமிழ் :**<br>தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாகவும், முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களாகவும் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகவும், சங்கப் பலகையில் சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.<br>**கடல்:**<br>கடல்- முத்தினையும், அமிழ்தினையும், சங்கு- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம், வணிகக் கப்பல்கள் செல்லும்படியும், தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. | <br><br>2½<br><br>2½ |
| 35 | **செய்குதம்பிப் பாவலர் 'சதாவதானி' என்று போற்றப்பட காரணம்:**<br>❖ செய்குதம்பியார் 1907 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் நாள் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டப் பெற்றார்.<br>❖ அன்று முதல் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். | 3<br><br>2 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| 36 | **இடம் :** பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் என்னும் பாடலின் பொருள் பரிசில் பெற்ற கூத்தன் பெற போகும் கூத்தனை ஆற்றுப்படுத்துதல்.<br>**விளக்கம்:** நன்னனின் ஊரில் பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெறப்போகும் கூத்தனிடம், "அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்" என்று ஆற்றுப்படுத்துகின்றான். | 2½<br>2½ |
| 37 | ❖ "மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே" என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.<br>❖ அதுபோன்று, வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! "நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்" என்று குலசேகராழ்வார். தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்துகிறார். | 2½<br>2½ |
| 38 | **முல்லைப்பாட்டு:**<br>**முதல் பொருள்: காடும் காடு சார்ந்த இடமும்**<br>பொழுது :<br>பெரும்பொழுது : கார்காலம் - ஆவணி, புரட்டாசி<br>சிறுபொழுது : மாலை<br>**கருப்பொருள்:**<br>**நீர் :** குறுஞ்சுனை நீர், காட்டாறு<br>**மரம் :** கொன்றை, காயா, குருந்தம்<br>**பூ :** முல்லை, பிடவம், தோன்றிப்பூ<br>**உரிப்பொருள்:** இருத்தலும் இருத்தல் நிமித்தமும்(காத்திருத்தல்) | 2<br>2<br>1 |
| | **பிரிவு – 3** | **4x5=20** |
| 39 | **பொருத்துக:**<br>அ) திருவிடைளயாடற்புராணம் - பரஞ்சோதி முனிவர்<br>ஆ) பூத்தொடுத்தல் - உமாமகேஸ்வரி<br>இ) பரிபாடல் - கீரந்தையார்<br>ஈ) திருக்குறள் - திருவள்ளுவர்<br>உ) காசிக்காண்டம் - அதிவீரராம பாண்டியர் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 40 | **உரைபத்தி வினாக்கள்:**<br>1. சின்னமனூர்<br>2. இராமாயணம், மகாபாரதம்<br>3. 'மாபாரதம் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்புகள் சங்க காலத்திலேயே மொழிபெயர்ப்பு இருந்ததை புலப்படுத்துகிறது<br>4. மதுரை<br>5. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 41 | <u>பெருமாள் திருமொழி</u><br>வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேயே.<br>- குலசேகராழ்வார் | 5 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | **(அல்லது)**<br>**முல்லைப்பாட்டு**<br>சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்<br>உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்<br>நடங்கு சுவல் அசைத்த கையள், "கைய<br>கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர<br>இன்னே வருகுவர், தாயர்" என்போள்<br>நன்னர் நன்மொழி கேட்டனம்.<br>- நப்பூதனார் | 5 |
| 42 | உரிய விடை இருப்பின் மதிப்பெண் வழங்கலாம். | 5 |
| | **பகுதி – IV (மதிப்பெண் 16)** | **2x8=16** |
| 43 | **இல்லத்திற்கு வந்த உறவினருக்கு செய்யும் விருந்தோம்பல்**<br>❖ உறவினர்களை வரவேற்றல்<br>❖ தண்ணீர் கொடுத்தல்<br>❖ குடிநீர் அளித்தல்<br>❖ உணவளித்தல்<br>❖ கேட்டுப் பரிமாறுதல்<br>❖ அறிந்து பரிமாறுதல்<br>❖ வற்புறுத்தி உண்ண வைத்தல்<br>❖ இனிப்பில் தொடங்கி இனிப்பில் முடித்தல்<br>❖ கை கழுவ உதவுதல்<br>❖ பழம், வெற்றிலை, பாக்கு<br>❖ விடை பெறுதல் | 2 |
| | ❖ தமிழரின் பண்பாடுகளுள் முக்கியமானது விருந்தோம்பல். இல்லறக் கடைமைகளில் தலையாயது விருந்து உபசரிப்பதாகும். | 1 |
| | ❖ விருந்தினர் விரும்புவது முகமலர்ச்சியுடன் கூடிய அன்பைத்தான் செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்நோக்கி இருக்கும் தமிழினம் நம் இனம். | 1 |
| | ❖ நெல்லையைச் சேர்ந்த எங்கள் குடும்ப நண்பரும் அவருடைய குழந்தைகளும் சென்னையில் உள்ள எங்கள் இல்லத்திற்குக் கோடை விடுமுறையைக் கொண்டாட வந்திருந்தனர். அவர்கள் தொடர்வண்டியில் வந்து இறங்கி அந்நேரத்திலிருந்து எங்கள் விருப்பம் என்று எதையும் நினைக்காமல் அவர்களின் விருப்பமே எங்கள் விருப்பமாயிற்று. | 1 |
| | ❖ ஒவ்வொரு பொழுதும் புதிதாய்க் கடந்தது. ஒவ்வொரு வேளையும் அவர்களின் குறிப்பறிந்து, விருப்பத்திற்கேற்ப உணவுகளைச் சமைத்து அருகிலிருந்து அன்போடு பரிமாறினோம். வெளியே செல்லும் வேளைகளில் கட்டுச்சோறு கட்டிச் சென்று பழைமையைப் புதுப்பித்தோம். அவர்கள் உறங்கிய பின் உறங்கி அவர்கள் எழும் முன் எழுந்து அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தோம். | 1 |
| | ❖ பழங்கதைகள் மட்டும் பழைமை மாறாமல் பேசிச் சுவைத்தோம். | 1 |
| | ❖ இவையனைத்தும் எங்கள் குடும்பத்தினருக்கும் அவர்கள் மீதுள்ள பற்றின் புரிதலைத் தந்தது. தமிழரின் பண்பாடு பாதுகாக்கப்பட்டவை என எண்ணி மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. | 1 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

(அல்லது)

**ஆ) காற்றின் ஆற்றல்:**

❖ காற்று, உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது; தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது; விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகிறது. 1

❖ பூவின் தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தைச் சுமந்து, புவியில் உயிர்ச்சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க 1
உதவுகிறது. இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் காற்று உள்ளது.

❖ **'காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்'** எனும் புதுமொழிக்கு வித்தாகிறது. புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான காற்றைப் 1
பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும்போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகிறது.

❖ உலகக் காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது என்பதும் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதும் பெருமையே. 1

❖ ஆனால், உலகிலேயே அதிகளவு காற்றை மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாம் இடம் இந்தியாவுக்கு என்பதை அறியும்போது நமக்கு பெருந்துயரே.

**காற்றின் மாசு:**

❖ குப்பைகள், நெகிழிப் பைகள், மெதுஉருளை (Tyres) போன்றவற்றை எரிப்பது, குளிர்சாதனப் பெட்டி குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை 1
மிகுதியாகப் பயன்படுத்துவது.

❖ மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பது, புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவது, பொதுப்போக்குவரத்தைப் 1
பயன்படுத்தாத தனிமனிதரின் மிகுதியான ஊர்திப்பயன்பாடு, வானூர்திகள் வெளிவிடும் புகை என மனிதனால் காற்று மாசு அடைகிறது.

❖ கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய், மூளை வளர்ச்சி குறைவு எனப் பல 1
நோய்களால் துன்பப்படுகிறீர்கள்.

❖ இந்தியாவிலேயே மிகுந்த உயிரிழப்பைத் தரும் காரணங்களில் ஐந்தாம் இடம் பெறுவது காற்று மாசுபாடே. 1

44 **அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வு:**

**மன்னனின் அவையில் நூலை வாசித்தல் :**

பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேலபாண்டின் என்னும் மன்னன் 1
தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் தாம் இயற்றிய நூலினை வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார். மன்னன் அதனைப் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.

**இறைவனிடம் முறையிடல் :**

இடைக்காடனார் மனம் நொந்து, இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! பாண்டிய மன்னன் முன் 1
சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்.

"மேலும் பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

**இறைவன் கோயிலை விட்டு நீங்குதல் :**

இறைவன், கோயிலை விட்டு வெளியேறி தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடு வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோயிலை ஆக்கி அங்குச் சென்று தங்கினார். 1

**பாண்டிய மன்னனின் வேண்டுதல் :**

இறைவன் கோயிலை விட்டு நீங்கியதால் பாண்டியன் “இறைவனே! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? எமது தந்தையே யான் அறியேன்” என்று பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டினான். 1

**இறைவனின் பதில் :**

இறைவன் மன்னனிடம், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்” என்று கூறினார். 1

**பொறுத்தருள்க இறைவா! :**

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?” என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

**மன்னன் புலவருக்கு மரியாதை செய்தல் :**

இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டினான் பாண்டிய மன்னன். அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்த பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான். 1

**புலவரிடம் மன்னிப்பை வேண்டினான் :**

பாண்டியன், “புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்’ என்று மிகவும் பணிவுடன் வேண்டினான். 1

**புலவர்களின் பதிலுரை :**

நுட்பமான கேள்வியறிவுடைய புலவர்களும், “மன்னா, நீ கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது என்று மனநிறைவுடன் கூறினார். 1

**(அல்லது)**

**ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும், பெருஞ்சித்திரனார் தமிழ் வாழ்த்து ஒப்பீடு:**

**சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து:**

❖ தமிழ்தாயை சுந்தரனார் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில், நீரலைகள் எழுந்து ஆர்ப்பரிக்கின்ற கடலைத் தன் ஆடையாய் உடுத்திக் கொண்டுள்ள நிலமாகிய பெண்ணுக்கு அழகிய முகமாகத் திகழ்வது பாரத கண்டம். 3

❖ அம்முகத்திற்கு அழகிய பிறை போன்ற நெற்றியாகத் திகழ்வது. தெற்குப்பகுதி, அந்நெற்றியில் இட்டுக்கொண்ட குங்குமம் போலப் புகழ் ஒளி வீசித் திகழ்வது திராவிட நாடு.

❖ அக்குங்குமத்தின் வாசனையைப் போல் அனைத்துப் பகுதி மக்களும் இன்பம் அடையும்படி எட்டுத் திசைகளிலும் பரவி வாழ்கின்ற தமிழ் என்னும் தெய்வமே தொன்று தொட்டு வாழ்ந்தாய் என்றாலும் உன் பெருவாழ்வு புதுமைக்குப் புதுமையாய் இன்றும் இளமையாய் விளங்குவது. தமிழ்த்தாயே உன் பேராற்றலை வியந்து செய்வதறியாது மெய்மறந்து வாழ்த்துகின்றோம் என வாழ்த்துகின்றார்.

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | **பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்து:**<br>❖ அழகாய் அமைந்த செந்தமிழே! அன்னை மொழியே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே!<br>❖ திருக்குறளின் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!<br>❖ பொங்கியெழும் நினைவுகளால் தமிழ்த்தாயே! உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகின்றோம் எனப் பெருஞ்சித்திரனார் வாழ்த்துகின்றார். | 3 |
| | **ஒப்பீடு :**<br>❖ மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் நிலம் என்னும் பெண்ணின் முகமாகத் திகழும் பாரத கண்டத்தில் அழகிய நெற்றியாகத் திகழ்வது தென்தமிழ்நாடு என்றும் அதில் குங்குமம் போல் திகழ்வது திராவிட நாடு என்கிறார். பழமையான மொழியாய் இருந்தாலும் புதுமைக்குப் புதுமையாய் இளமையாய்த் தன்மை நிலை நிறுத்தி எட்டுத்திசைகளிலும் பரப்பி வாழ்கிறது தமிழ் எனத் தமிழை வாழ்த்துகிறார். | 1 |
| | ❖ பெருஞ்சித்திரனார் அவர்கள் பழமையான மொழியாகக் குமரிக்கண்டத்தில் தோன்றி பாண்டிய மன்னனின் மகளாய் அரசாண்ட பெருமைக்குரியவள் என்றும் காப்பியங்களின் வடிவமாய்த் திகழும் தமிழ்த்தாயே உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகிறோம் எனத் திராவிட நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ் அன்னையைப் போற்றிப் பாடுகின்றார். | 1 |

*****


**SHRI KRISHNA ACADEMY**

✍ **CREATIVE QUESTIONS ,MATERIALS(GUIDE), FULL TEST QUESTION PAPERS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.**

→ **For MORE DETAILS - 99655 31727 , 94432 31727**